**மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2014**

---

மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, நிதியங்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1981 இன் 66 ஆம் இலக்க மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 10(4) ஆம் பிரிவுடன் சேர்த்து சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக கொடுக்கல் வாங்கல்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஒக்தோபர் 03 இல் நிதியத்தின் தலைவரிற்கு வழங்கப்பட்டது. நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000–1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

## 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் ஐந்தொகையை தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

### 2.2.1 ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள்

---

ஆரம்ப மூலதனமான ரூபா 373,500,000 தொகை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் ஈடுபடுத்தப்பட்டு பணிப்பாளர் சபை பதவிவழியில் நியமிக்கப்பட்டு உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் (எஸ்எல்ஐஐரீ) நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் துணைக் கம்பனிகளான நஷனல் வெல்த் கோப்பரேஷன் மற்றும் நற்வெல்த் செக்கியூரிட்டீஸ் ஆகிய கம்பனிகளுடன் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2013 ஆம் ஆண்டிலிருந்து தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 50 சதவீத பங்குகளை உரித்தாகக் கொண்டிருந்த அபிவிருத்தி லொத்தர் சபையின் நிதிக்கூற்றுக்கள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதிக்கூற்றுக்களுடன் ஒன்றிணைக்கப்பட்டு தொகுதியின் கணக்குகள் தயாரிக்கப்படாதமை தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் எந்தவொரு வெளிப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி அறிக்கையிடலுக்கான கருத்துருக் கட்டமைப்பின் 4.56 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனமானது அதன் நிதிக்கூற்றுக்களை வரலாற்றுக் கிரய அடிப்படை அல்லது வேறு அடிப்படையின் பிரகாரம் தயாரிக்க வேண்டியதுடன் அவ் அடிப்படை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். எனினும், நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பின்பற்றியிருந்த அடிப்படையை வெளிப்படுத்தியிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 07**

---

(i) நியமத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கொண்டு செல்லும் தொகை நிதி நிலைமைக் கூற்றில் அல்லது கணக்குகளிற்கான குறிப்புக்களில் வகைப்படுத்தப்பட வேண்டிய போதிலும் நம்பிக்கை பொறுப்பு நிதியம் அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) நியமத்தின் 31 மற்றும் 33 ஆம் பந்திகளின் பிரகாரம் நிதி இடர் முகாமைத்துவம் தொடர்பாக வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அத்தகைய வெளிப்படுத்தல்களை மேற்கொண்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01**

---

(i) நியமத்தின் 10(ஈ) பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து காசுப்பாய்ச்சல் கூற்றினை நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் சமர்ப்பித்திருக்கவில்லை.

(ii) நியமத்தின் 32 ஆம் பந்தியின் மூலம் அனுமதிக்கப்பட்டால் அல்லது தேவைப்படுத்தப்பட்டாலன்றி சொத்துக்களும் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்பட்ட முடியாத போதிலும் ரூபா 11,440,401 தொகையான வங்கி மேலதிகப்பற்று நடைமுறைச் சொத்துக்களில் கழிக்கப்பட்டுக் காட்டப்பட்டிருந்தது.

(iii) நியமத்தின் 38 ஆம் பந்தியின் பிரகாரம் தற்போதைய காலப்பகுதியின் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்ட அனைத்து தொகைகளிற்கும் உரிய முன்னைய காலப்பகுதி தொடர்பான ஒப்பீட்டுத் தகவல்களை நிறுவனம் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் கணக்குகளிற்கான குறிப்புக்களில் ஒப்பீட்டுத் தகவல்களை சமர்ப்பித்திருக்கவில்லை.

(iv) நியமத்தின் 57 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் உரிமை மூலதனத்தின் கீழ் திரண்ட நிதியம் மற்றும் தேறிய மிகை என்பன குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் இவை நடைமுறையல்லாப் பொறுப்புக்களாக பொருத்தமற்றவாறு குறிப்பிடப்பட்டிருந்தன.

(v) ரூபா 8,364,011,651 தொகையான நிதியத்தின் நிதிச் சொத்துக்கள் நியமத்தின் 60 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைச் சொத்துக்களாக தனித்தனியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(vi) நியமத்தின் 99 ஆம் பந்தியின் பிரகாரம் வருமான செலவினக் கணக்கு நிறுவனத்தின் தன்மை மற்றும் தொழிற்பாடுகளில் தங்கியுள்ள வகைப்படுத்தல் அடிப்படையொன்றின் கீழ் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

நியமத்தின் 15 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களாக இனங்காணப்படுதவதற்கு தகைமையுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படியொன்று அதன் கிரயத்தில் கணக்கிற்கு கொண்வரப்பட வேண்டிய போதிலும் அவை புத்தகப் பெறுமதியில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

**(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 18**

நியமத்தின் 30(அ) பந்தியின் பிரகாரம் செயற்திறனான வட்டி முறையை பயன்படுத்தி வட்டி கணிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அட்டுறு அடிப்படையில் வட்டிகள் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தன.

**(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 24**

நியமத்தின் 25 மற்றும் 26 ஆம் பந்திகளின் பிரகாரம் தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களை அவ்வாறு வெளிப்படுத்தியிருக்கவில்லை.

**(எ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39**

நஷனல் வெல்த் கோப்பரேஷன் லிமிட்டட்டால் முகாமை செய்யப்பட்ட போட்போலியோ (Portfolio) தொடர்பாக கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கின் பிரகாரம் காணப்பட்ட ரூபா 3,381,573,778 திறைசேரி முறிகள், ரூபா 501,949,964 திறைசேரி உண்டியல்கள், ரூபா 123,737,617 மீள் விற்பனை, ரூபா 227,080,000 முன்னுரிமைப் பங்கு, ரூபா 556,094,821 தொகுதிக்கடன், ரூபா 1,163,206,493 சொத்து மீள் நம்பிக்கைப் பொறுப்புச் சான்றிதழ், ரூபா 368,946,233 வணிகத் தாள்கள், ரூபா 214,493,664 நிலையான வைப்புக்கள் மற்றும் ரூபா 48,831 தொகையான நடைமுறைக் கணக்கு மீதி என்பன உள்ளடங்கிய வரவு மீதி மற்றும் ரூபா 1,302,302 மீள்கொள்வனவு செலவு மீதி என்பன நியமத்தின் 45 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் வகைப்படுத்தப்பட்டு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேலும், இவ் முதலீடுகளின் பெறுமதி கணிப்பீட்டின் போது பின்பற்றப்பட்ட அடிப்படை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) **இலங்கை கணக்கீட்டு நியமம் 40**

இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்திற்கு (எஸ்எல்ஜஐரீ) குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குச் சொந்தமான 2005 ஆம் ஆண்டின் போது ரூபா 12,460,179 றெமதிக்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்த மாலபேயில் அமைந்துள்ள 25 ஏக்கர்கள் பரப்பளவான காணி நியமத்தின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஆதனமொன்றாக தனியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதேபோல் இவ் ஆதனங்கள் தற்போதைய பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நடைமுறையல்லாப் பொறுப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 858,900 பெறுமதியான செலுத்த வேண்டிய பணிக்கொடை நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றிற்கு சீராக்கம் செய்யப்பட வேண்டிய ரூபா 9,000,000 பெறுமதியான பங்கிலாபங்கள் வருமானச் செலவினக் கணக்கில் வருமானத்தின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திடமிருந்து 2005 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரை பெறப்பட வேண்டிய ரூபா 89,471,655 வாடகை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய ஒன்லைன் (Online) சீட்டிழுப்பு வருமானம் மற்றும் தாமதங்களிற்கான தண்டப்பணமாக பெறப்பட வேண்டிய ரூபா 265,000,000 தொகை கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(உ) 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் துணைக் கம்பனியொன்றால் வழங்கப்பட்ட ரூபா 100,000,000 பெறுமதியான மிகையூதிய பங்குகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்புக்களின் வட்டி வருமானம் பேரேட்டில் ரூபா 262,930,213 ஆக காட்டப்பட்டிருந்த போதிலும் இது நிதிக்கூற்றுக்களில் ரூபா 26,445,295 ஆல் அதிகரித்து ரூபா 289,375,508 ஆக காட்டப்பட்டிருந்தது.

(எ) அபிவிருத்தி லொத்தர் சபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், அபிவிருத்தி லொத்தர் இலாபப் பங்குகளாக நம்பிக்கை பொறுப்பு நிதியத்தால் பெறப்பட வேண்டிய இலாபப் பங்கு ரூபா 979,015,762 தொகையாக காணப்பட்ட போதிலும் இது நிதிக்கூற்றுக்களில் ரூபா 81,247,363 ஆல் குறைத்து ரூபா 897,768,399 ஆக காட்டப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கின் பிரகாரம் மீளாய்வாண்டு தொடர்பாக நஷனல் வெல்த் கோப்பரேஷன் லிமிட்டட்டால் முகாமை செய்யப்பட்ட மஹபொல போட்போலியோ மீதி ரூபா 6,535,829,099 தொகையாக காணப்பட்ட போதிலும் மஹபொல நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் ஐந்தொகையின் பிரகாரம் அம் மீதி ரூபா 6,530,353,720 தொகையாகக் காணப்பட்டது. அதற்கிணங்க, ரூபா 5,475,379 விளக்கமளிக்கப்படாத வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) சனாதிபதி நிதியத்தினூடாக நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் பெறப்பட்ட இலாபத்திலிருந்து உயர்தர மாணவர்களிற்கு வழங்கப்பட்ட புலமைப்பரிசில்களின் பெறுமதியானது சனாதிபதி நிதியத்தால் வழங்கப்பட்ட உறுதிப்படுத்தலின் பிரகாரம் ரூபா 55,159,000 தொகையாக காணப்பட்ட போதிலும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் அத்தொகை ரூபா 54,285,000 ஆக காட்டப்பட்டிருந்ததால் ரூபா 874,000 விளக்கமளிக்கப்படாத வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

சில பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்கள் தொடர்பாக பாடசாலை அபிவிருத்தி நிதியத்தால் செலுத்த வேண்டிய ரூபா 3,832,874 கூட்டுமொத்தமான செலவினம் அவை தொடர்பாக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமல் 2013 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

## 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதிசார் விளைவுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 1,079,677,832 மிகையுடன் ஒப்பிடும் போது ரூபா 961,590,743 மிகையாக காணப்பட்டதனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 118,087,089 வீழ்ச்சியொன்றை சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமானம் ரூபா 237,580,513 ஆல் அதிகரித்திருந்த போதிலும் மஹபொல புலமைப்பரிசில் கொடுப்பனவுகள் ரூபா 402,691,050 ஆல் அதிகரித்தமையே மேற்படி வீழ்ச்சிக்கான பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 02 ஆண்டுகளினதும் நிதிசார் விளைவுகளினை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை தளம்பல்களுடன் மிகையொன்று ஏற்பட்டிருந்தது. எனினும் நிதிசார் விளைவுகளிற்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கம் செய்த போது 2012 ஆம் ஆண்டின் ரூபா 688,827,839 பங்களிப்பு 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 1,086,213,752 வரை அதிகரித்திருந்த போதிலும் மீளாய்வாண்டில் அப்பங்களிப்பு ரூபா 968,376,850 வரை வீழ்ச்சியடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

### 4.1.1 திட்டமிடல்

நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் 2012 - 2015 ஆண்டு காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் அளவு மற்றும் நிதி ரீதியாக தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்காததுடன் மேற்படி திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், செயன்முன்னேற்றம் மதிப்பீடு செய்யப்பட முடியாதிருந்தது.

### 4.1.2 தொழிற்பாடும் மீளாய்வும்

மீளாய்வாண்டின் போது முதலீட்டு வைப்புக்களிலிருந்தான வட்டிகள், அபிவிருத்தி லொத்தர் சபையிலிருந்தான வருமானம் உள்ளடங்கலாக ரூபா 1,914 மில்லியன் கூட்டுமொத்த தொகையை நம்பிக்கை பொறுப்பு நிதியம் பெற்றிருந்தது. அதில் ரூபா 1,023 மில்லியன் தொகை அல்லது 54 சதவீதம் மாத்திரம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நோக்கங்களில் ஒன்றான 12,656 மஹபொல புலமைப்பரிசில்களை வழங்குவதற்காக செலவிடப்பட்டிருந்தது. நிதியத்தின் ஏனைய எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மிகுதித் தொகையை பயன்படுத்துவதற்கு நிதியம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. அதற்கிணங்க, அவ்வாறு சேமிக்கப்பட்ட பணம் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் முதலீட்டுப் பெறுமதி ரூபா 1,512 மில்லியனாக இருந்தது.

## 4.2 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

பல்கலைக்கழகத்திற்கு உள்நுழைவதற்கான வாய்ப்புக்களை பெற்றிருக்காத மாணவர்களிற்குத் தகவல் தொழில்நுட்பத் துறையில் உயர் கல்வியை தொடருவதற்கான வழியினை வகுக்கும் நோக்கில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பங்களிப்பின் கீழ் தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தை ஸ்தாபிப்பதற்காக 1998 யூலை 08 ஆந் திகதிய 98/995/11/052 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தை உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றாக ஸ்தாபிப்பதற்காகவும் நிலைமாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் நிலைமாறல் காலப்பகுதியின் இறுதியில் மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்கு அதனை மாற்றுவதற்கும் உள்ளூர் மற்றும் சர்வதேச வாணிப அமைச்சில் இடம்பெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, ‘‘இலங்கை’’ எனும் பதம் உள்ளடங்கலாக உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தை ஸ்தாபிப்பதற்கான பொறுப்பு மற்றும் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் தேவையான நிதிகளையும் அதற்கான வளப் பங்களிப்பையும் வழங்குதல் என்பன மஹபொல உயர்கல்வி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு உள்ளன.

(அ) 2003 மார்ச் 19 இல் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றான இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்துடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு சொந்தமான மாலபே பிரதேசத்தில் அமைந்துள்ள 25 ஏக்கர் காணியில் அமைந்துள்ள பல்கலைக்கழகம் 08 ஆண்டுகள் காலப்பகுதிக்கு முகாமைத்துவம் செய்வதற்காக கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவ் உடன்படிக்கைக் காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர் 2005 நவம்பர் 14 இல் மீண்டும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் இலங்கை தகவல் தொழில்நுட்ப (உத்தரவாதத்தால்) வரையறுக்கப்பட்ட கம்பனியுடன் உடன்படிக்கையை கைச்சாத்திட்டிருந்ததுடன் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு சாதகமாக இருந்த ஆரம்ப உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட பின்வரும் நிபந்தனைகள் புதிய உடன்படிக்கையில் நீக்கப்பட்டோ அல்லது திருத்தப்பட்டோ உள்ளது.

### நீக்கப்பட்ட நிபந்தனைகள்

(i) 4(உ) பிரிவு - மகாபொல பல்கலைக்கழகத்தின் அனைத்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் (எஸ்எல்ஐஐரீ) ஏனைய கிளைகளின் ஸ்தாபிப்பிற்கு அல்லது நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நோக்கங்களுக்கு முரணாக ஏனைய வர்த்தக நோக்கங்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பயன்படுத்தப்படக்கூடாது.

(ii) 4(எ) பிரிவு - பல்கலைக்கழகத்தின் மேம்பாட்டிற்காக கருதும் அனைத்து தொழிற்பாடுகளும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் இணக்கப்பாட்டுடன் நிறைவேற்றப்படல் வேண்டும்.

(iii) 4(ஏ) - கல்விசார் பாடநெறிகளினை நடாத்துவதனூடாக வருமானத்தை சேகரித்தல் மற்றும் பல்கலைக்கழகத்தின் முன்னேற்றத்திற்கு அவசியமான செலவினத்தை மேற்கொள்ளுதல் என்பன இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் (எஸ்எல்ஐஐரீ) பொறுப்பொன்றாகக் காணப்படும்.

(iv) 4(கா) - நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தேசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (என்டீபீ) கணிசமான கடன் தொகையொன்றினை பெற்றுக்கொண்டது என்ற உண்மையினை இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் (எஸ்எல்ஐஐரீ) அறிந்திருக்க வேண்டியதுடன் அது சிறந்த நிதிசார் நம்பிக்கைத் தன்மையை பெற்றிருக்கும் போது தவணைப் பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு ஒவ்வொரு சாத்தியமான முயற்சியினையும் மேற்கொள்வதை இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் (எஸ்எல்ஐஐரீ) உறுதிப்படுத்துதல்.

(v) 4(கீ) - பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவத்தினை பேணுதல் மற்றும் அதன் கணக்குகளினை மதிப்பீடு செய்து பரீட்சிப்பதற்கு தகுதிவாய்ந்த முகாமையாளர்கள் மற்றும் கணக்காய்வாளர்களை உள்ளடக்கிய சுதந்திரமான அமைப்பொன்றை நியமிப்பதற்கும் எதிர்காலத்தில் அறிமுகப்படுத்துவதற்கு வாய்ப்பாக இருக்ககூடிய புதிய பாடநெறிகளினை மதிப்பிடுவதற்காக தகைமைவாய்ந்த தேர்ச்சிபெற்ற திறமையான தனிநபர்கள் குழுவொன்றை நியமிப்பதற்கும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை உரிமையைக் கொண்டிருத்தல்.

(vi) 4(கெ) பிரிவு - நம்பிக்கைப் பொறுப்பாளரின் தீர்மானத்தினைத் தொடர்ந்து மாலபே பல்கலைக்கழகம் ‘‘மஹபொல கம்பஸ்’’ என பெயரிடப்படுதல் கேட்போர்கூடம் ‘‘லலித் அதுலத்முதலி கேட்போர்கூடம்’’ என பெயரிடப்படுதல் மற்றும் தொடர்புடைய பெயர்ப் பலகைகள் வளாகத்தில் தெளிவாக காட்சிப்படுத்தப்படுதல்

(vii) 4(ச) - செல்லுபடியாகும் காலப்பகுதி முடிவடைதல் காரணமாக அல்லது வேறு வழியில் இவ் உடன்படிக்கை முடிவுறுத்தப்படும் போது நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் நிதியிடப்பட்ட சொத்துக்கள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஆதனங்களாக காணப்பட வேண்டும்.

**திருத்தப்பட்ட நிபந்தனைகள்**

---

(i) 2003 மார்ச் 19 ஆந் திகதிய சட்டரீதியான உடன்படிக்கையின் 4(க) பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளான ‘‘இணங்கப்பட்டிருந்த முகாமைத்துவக் கட்டணத்தை கழித்ததன் பின்னர் பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகள் ஊடாக உருவாக்கப்பட்ட வருமான மிகை அடுத்துவரும் ஆண்டின் யூன் 30 இற்கு முன்னர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும் என்பதும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் முன் அங்கீகாரமின்றி ஏனைய முதலீடுகள் எதுவும் மேற்கொள்ளப்பட முடியாது என்பதும் எவ்வாறாயினும், பல்கலைக்கழகத்தின் எதிர்கால அபிவிருத்திக்காக ஒதுக்கீட்டுக் கணக்கொன்றை பேணுவதற்காக இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் (எஸ்எல்ஐஐரீ) பணிப்பாளர் சபையினால் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் அனுமதி கோரப்பட முடியும் என்பதும் அத்துடன் அவ்வாறான அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கு தேவையான பணம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் இவ் ஒதுக்கக் கணக்கிலிருந்து வழங்கப்பட முடியும் என்பதும்’’ என்பவற்றிற்கு பதிலாக நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குச் சொந்தமான காணி குத்தகை அடிப்படையில் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்திற்கு (எஸ்எல்ஐஐரீ) வழங்கப்படும் வகையில் புதிய உடன்படிக்கை

ஊடாக திருத்தம் செய்யப்பட்டு உடன்படிக்கையின் 5(அ)(i) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த குத்தகையாக ரூபா 8 மில்லியன் அல்லது இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் (எஸ்எல்ஐஐரீ) வருடாந்த தேறியலாபத்தில் 20 சதவீதமான பெறுமதி இரண்டிலும் ஆகக்கூடிய பெறுமதி செலுத்தப்பட வேண்டும் என இணங்கப்பட்டது.

(ii) நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் என்பவற்றுக்கிடையே 2003 மார்ச் 19 இல் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் 4(க) பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகள் மீது பரிந்துரைப்பதற்கான அதிகாரம் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் பல்கலைக்கழகத்தின் மேம்பாடு தொடர்பான அனைத்து அளவீடுகளும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஒத்துழைப்பின் கீழ் எடுக்கப்பட வேண்டும். எனினும், புதிய உடன்படிக்கையின் 4(உ) மற்றும் (ஊ) பிரிவுகளின் பிரகாரம் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவக நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அதன் பணிப்பாளர் சபையால் எடுக்கப்பட்ட தீர்மானங்களிற்கிணங்க பல்கலைக்கழக செயற்பாடுகளை மேற்கொள்ளுதல், அதற்கு இணங்க சுற்றறிக்கைகளை தயாரித்தல், பரீட்சைகளிற்கான தயார்படுத்தல், மாணவர்களை சேர்த்துக் கொள்ளுதல், கல்விசார் பதவியணியினரின் தொழில் மற்றும் உட்கட்டமைப்புக்களின் முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பு போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய அதேநேரம் பிரதான நிர்மாணங்கள் மாத்திரம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்படுவதற்கு இணங்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களினுள் வரைபு வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிதிக்கூற்றுக்கள் 2018 யூலை 18 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 உள்ளகக் கட்டுப்பாடு

நிதியத்தின் நிதி நடவடிக்கைகள் தொடர்பாக நிதி முகாமையாளர்/ கணக்காளரின் பதவியொன்று காணப்படாததன் காரணமாக கொடுப்பனவுகளிற்கான பரிந்துரைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அங்கீகாரம் வழங்குதல் என்பன பணிப்பாளராலேயே மேற்கொள்ளப்படுகின்றதுடன் கணக்கீடு மற்றும் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணுதல் என்பன பலவீனமான மட்டத்தில் காணப்பட்டன.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் நிதியத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | | அவதானிப்புக்கள் |
| --- | --- | --- |
| (அ) | முதலீட்டு முகாமைத்துவம் | உரிய அங்கீகாரம் இன்றி முதலீடுகள் முகாமை செய்யப்படுதல் மற்றும் முதலீட்டு நலன்கள் மதிப்பீடு செய்யப்படாமை. |
| (ஆ) | உள்ளகக் கட்டுப்பாடு | கணக்கீடு செய்தல் மற்றும் புத்தகங்கள் பதிவேடுகளை பேணுதல் நலிவான மட்டத்தில் காணப்படுதல். |
| (இ) | பெறுகை | பெறுகை வழிகாட்டல்கள், பெறுகைக் கைநூல் மற்றும் பெறுகைத் திட்டங்களிற்கு இணங்க நடவடிக்கைகள் எடுக்கப்படாமை. |